**செய்தி வெளியீடு எண் : 1891** **நாள் : 30.10.2022**

**செய்தி வெளியீடு**

# சில நாளிதழ்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக பருப்பு கொள்முதல் தொடர்பாக வெளிவந்த தவறான செய்திக்கு மேலாண்மை இயக்குநரின் மறுப்பறிக்கை

******

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் சிறப்பு பொது விநியோகத்திட்ட பொருட்களான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஒவ்வொரு மாதமும் கொள்முதல் செய்யப்பட்டு பொது விநியோக அங்காடிகளின் மூலம் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் வரும் நவம்பர் 2022 மாதத்திற்கு தேவையான துவரம் பருப்பினை கொள்முதல் செய்வதற்கு இ ஒப்பந்தப்புள்ளி மூலம் 20,000 மெ.டன் துவரம் பருப்பு கொள்முதல் செய்ய டெண்டர் கோரப்பட்டு, அதற்கான விளம்பர அறிக்கை கடந்த 17.10.2022 அன்று வெளியிடப்பட்டது

நவம்பர் மாத கொள்முதலுக்காக கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் கடந்த காலங்களில் தெரிவிக்கப்பட்டியிருந்த துவரம் பருப்பு தர நிர்ணயங்களுடன் (Specification) கூடுதலாக கீழ்க்காணும் அளவு மற்றும் விவரங்களுடன் துவரம் பருப்புகள் இருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பிரிவு 14 (அ)** – துவரம் பருப்பு உடைக்கப்பட்டு தவிடு நீக்கப்பட்டு பட்கா ரகம் (உள்நாட்டு துவரம்பருப்பு)

**(ஆ) தானிய அளவு** : துவரம் பருப்பு (உடைக்கப்பட்டு தவிடு நீக்கப்பட்டது மற்றும் பட்கா ரகம்) விரும்பத் தக்க அளவு 4 மில்லிமீட்டர் முதல் 6 மில்லிமீட்டர் வரை இருக்க வேண்டும்.

**(இ) சல்லடை ஆய்வு**: துவரம் பருப்பு (உடைக்கப்பட்டு தவிடு நீக்கப்பட்டது மற்றும் பட்கா ரகம்) 6 மில்லி மீட்டர் உள்ள சல்லடையில் 90 சதவீதம் வரை கடத்தப்படவேண்டும் மற்றும் 4 மில்லி மீட்டர் உள்ள சல்லடையில் 100சதவீதம் தங்க வேண்டும்.

மேற்குறிப்பிட்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 25.10.2022 அன்று திறக்கப்பட்டன. அதில் துவரம் பருப்பு வழங்க 12 நிறுவனங்களும் கனடா மஞ்சள் பருப்பு வழங்க ஒரு நிறுவனமும் பங்கேற்றன.

இந்த நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவினர் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–ன்படி முறையாக ஆய்வு செய்து தங்கள் அறிக்கையினைச் சமர்ப்பித்ததன் அடிப்படையில், தகுதி பெற்ற ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்களின் விலைப்புள்ளிகள் 28.10.2022 அன்று திறக்கப்பட்டதில், துவரம் பருப்புக்கு குறைந்த விலைப்புள்ளியாக கிலோ ஒன்றுக்கு ரூ.107.439 ஆகவும்,

அதற்கடுத்ததாக ரூ.107.43927 ஆகவும், அதற்கடுத்ததாக ரூ.108.959 ஆகவும், அதற்கடுத்ததாக ரூ.109.90 ஆகவும், அதற்கடுத்ததாக ரூ.111.111 ஆகவும், அதற்கடுத்ததாக ரூ.111.789 ஆகவும், அதற்கடுத்ததாக ரூ.112.87 ஆகவும், அதற்கடுத்ததாக ரூ.114.00 ஆகவும், அதற்கடுத்ததாக ரூ.118.007 ஆகவும், அதற்கடுத்ததாக ரூ.118.007 ஆகவும், அதற்கடுத்ததாக ரூ.120.007 ஆகவும், அதற்கடுத்ததாக ரூ.123.00 ஆகவும் இருந்தது. கனடா மஞ்சள் பருப்புக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.118.007 ஆகவும் இருந்தது.

29.10.2022 அன்று துணைக் குழுமக் குபவினரால் (Board Sub Committee) நடத்தப்பட்ட பேச்சு வார்த்தையின் அடிப்படையில், துவரம் பருப்புக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனம், கிலோ ஒன்றுக்கு ரூ.107.434 க்கு விலைக் குறைப்பு செய்ததன் அடிப்படையில் அந்த நிறுவனத்திற்கும் அதே விலையில் துவரம் பருப்பு வழங்க ஒப்புதல் தெரிவித்த பிற ஆறு நிறுவனங்களில் ஒப்பந்தப் புள்ளிச் சட்ட விதிமுறைகளின்படி வரிசைக்கிரமப்படி நான்கு நிறுவனங்களுக்கும் கொள்முதல் ஆணைகள் 29.10.2022 அன்று வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தை பொறுத்தவரை ஒவ்வொரு கொள்முதலின் போதும் வெளிப்படைத் தன்மையுடன் இ டெண்டர் முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுஅவற்றில் பங்கேற்கும் நிறுவனத்திடம் பருப்பு மாதிரிகள் பெறப்பட்டு NABL அங்கீகாரம் உள்ளஆய்வகத்திற்கு மாதிரியினை அனுப்பி, அவற்றிலிருந்து பெறப்படும் பகுப்பாய்வு அறிக்கை மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின் அடிப்படையில் தேர்ச்சி பெற்ற நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–ன்படி பேச்சுவார்த்தை நடத்தி விலை இறுதி செய்யப்பட்டுத் தகுதியான நிறுவனங்களுக்கு கொள்முதல் ஆணைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கொள்முதல் ஆணை வழங்கப்பட்ட நிறுவனங்கள் துவரம் பருப்பினைக் கிடங்குகளில் ஒப்படைக்கும் போது கிடங்கு தரக்கட்டுப்பாடு அலுவலர்கள் தர முன் ஆய்வு (Pre Analysis) மற்றும் முழு ஆய்வு (Final Sample Analysis) செய்து அனுமதிக்கப்பட்ட தர நிர்ணயத்திற்குட்பட்டு இருந்தால் மட்டுமே கிடங்கினுள் இறக்கம் செய்யப்பட்டு, தரத்தினை உறுதி செய்த பின்னரே பொது விநியோகத்திட்டத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. இது தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

எனவே, வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் துவரம் பருப்பு சப்ளை செய்யவே குறைந்த விலைப்புள்ளி வழங்கி இருப்பதாக தெரியவந்துள்ளது என்ற செய்தி முற்றிலும் உண்மைக்கு புறம்பானதும் மற்றும் அடிப்படை ஆதாரமற்றது. மேலும், குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனம் அவர்கள் ஒத்துக் கொண்ட அளவு போக எஞ்சியுள்ள அளவினை அடுத்த குறைந்த விலைப்புள்ளி வழங்கிய அல்லது குறைந்த விலைப்புள்ளிக்கு வழங்க இசைவு தெரிவிக்கும் தகுதியான நிறுவனங்களுக்கு கொள்முதல் ஆணைகள் வழங்கப்படுவது தான் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–ன்படி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் உள்ளிட்ட எல்லா நிறுவனங்களிலும் பின்பற்றப்படும் நடைமுறையாகும். ஆதலால், ஒரே தனியார் நிறுவனத்திற்கு மொத்த ஆர்டரும் கொடுத்தது தெரியக்கூடாது

என்பதற்காக ஐந்து நிறுவனங்களுக்கு பிரித்து தரப்பட்டுள்ளது என்றும் அந்த ஒரு நிறுவனம் வழங்கும் வெளிநாட்டு இறக்குமதி பருப்பை வாங்கித்தான் மற்ற நான்கு நிறுவனங்களும் அரசுக்கு சப்ளை செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள செய்தி முற்றிலும் உண்மைக்கு புறம்பானது மற்றும் அடிப்படை ஆதாரமற்றது.

இந்நிலையில் இரண்டு நாளிதழ்கள் 30.10.2022 தேதியிட்ட பதிப்பில் துவரம் பருப்பு கொள்முதல் தொடர்பாக யூகத்தின் அடிப்படையில் வெளியிடப்பட்ட செய்திகள் உண்மைக்குப் புறம்பானது மற்றும் அடிப்படை ஆதாரமற்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மேலாண்மை இயக்குநர் (மு.கூ.பொ)**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in